# 49-ஓ போடு!



ஞாநி

சராசரியாக நூற்றுக்கு 40, 45 பேர் தேர்தலில் ஓட்டுப் போடுவதில்லை. அன்றைய தினம் விடுமுறை விட்டிருந்தும் கூட இவர்கள் ஓட்டுப் போடு வதில்லை.

“ஏங்க, ஓட்டுப்போடப் போகல?”

“ஒருத்தரும் சரியில்ல. இவங்க அவங்க மேல குற்றச்சாட்டு வைக்க றாங்க. அவங்க இவங்க மேல வைக் கறாங்க. ரெண்டு பேரும் சொல்றது உண்மைதான்னு எடுத்துக்கிட்டா, ரெண்டு பேரும் சரியில்லனுதானே அர்த்தம். மூணாவதா ஒருத்தரும் சரியா வரல... வர்றவங்களும் ஏற்கெனவே சம்பாதிச்சு வெச்ச சொத்தைக் காப்பாத்திக்க அதிகாரம் தேவைனு அரசியலுக்கு வர்றாங்க... ஆகமொத்தம் யாரும் சரியில்ல... அதனாலதான் ஓட்டுப்போட போறது இல்ல” என்று பல பேர் தர்க்கரீதியில் வாதங்களை அடுக்கு கிறார்கள்.

இந்த 40 பேர் ஓட்டுப் போடப் போகாததால் என்ன ஆகிறது? அறுபது பேர் அளித்த ஓட்டுகளில் இருபது ஓட்டுக் கிடைத்தவர்கூட ஜெயித்து விட முடிகிறது. ‘யாரும் சரியில்லை’ என்று நினைத்து ஓட்டுப் போடச் செல் லாதவர்களில் 25 பேர் போய் ஓட்டுப் போட் டிருந்தால், தேர்தல் முடிவு மாறிவிடும்.

‘யாரையும் பிடிக்கவில்லை’ என்று ஓட்டுப் போட முடியுமா? சட்டப்படி முடியும். அதுதான் 49-ஓ. ஆனால், இப்படி ஒரு வழி இருக்கிறது என்பதே பலருக்கும் தெரியாது. 49-ஓ என்பதை வாக்காளர் களுக்குத் தெரியப்படுத்தும் வேலையை நிச்சயம் அரசியல் கட்சிகள் செய்யப் போவதில்லை. தேர்தல் ஆணையம் செய்திருக்க வேண் டும். அதுவோ இத்தனை நாட் களாக, ஓட்டுச்சாவடி அதிகாரிகளுக்குக்கூட இதை ஒழுங்காகக் கற்றுத்தரவில்லை. இந்த வருடம்தான் உந்துநர் அறக்கட்டளை போன்ற தொண்டு நிறுவனங்கள் எடுத்த முயற்சியினால், தேர்தல் ஆணையம் 49-ஓ பற்றி அறிவுறுத்தி யிருக்கிறது.

1961-ம் ஆண்டு சட்டமான தேர்தல் விதிகளின் 49-வது ஓ பிரிவின் படி, ஓட்டுச்சாவடிக்கு வந்த வாக் காளர், அவர் பெயர் வாக்காளர் பட்டியலில் இருப்பதை உறுதிசெய்து, விரலில் மை வைக்கப் பட்டபிறகு, ‘எந்த வேட்பாளருக்கும் ஓட்டுபோட விரும்பவில்லை’ என்பதைத் தெரிவிக்கும் விதத்தில், சாவடி அதிகாரியிடம் ‘நான் 49-ஓ பதிவு செய்கிறேன்’ என்று சொல்லலாம். உடனே அந்த அதிகாரி இதற்கென்று உள்ள படிவம் 17-ஏ-வுக்கான பதிவேட்டில், வாக்காளர் பெயர் விவரங்களைக் குறித்துக்கொண்டு, அதில் கையெழுத்திட சொல்லவேண் டும். இதையடுத்து, 49-ஓ போட்டதாகப் பதிவாகி விடுகிறது. அவ்வளவுதான். எத்தனை பேர் 49-ஓ பதிவு செய்தார்கள் என்ற கணக்கை, சாவடி அதிகாரி கடைசியில் தேர்தல் ஆணையத்துக்கு அளிப்பார்.

சரி... 49-ஓ போடுவதால் என்ன பயன்?

ஓட்டுப் போடாமல் இருப்பதைவிட 49-ஓ போடுவதுதான் பயனுள்ளது. ஏனென்றால், எந்த வேட்பாளரையும் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை அரசியல் கட்சிகளுக்குத் தெளிவாக உணர்த்தும் வழி இதுதான்.

ஒரு உதாரணத்தைப் பார்க்கலாம். வடசென்னை எம்.பி. தேர்தலில் (1999) ஓட்டுப் போட வராதவர்கள் எண்ணிக்கை 70 சதவிகிதம்! அந்த வருட மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டின் 4.75 கோடி வாக்காளர்களில் சுமார் 2 கோடி பேர் வாக்களிக்கவில்லை.

ஓட்டுப் போட செல்லாமல் இருப்பவர்கள் போய் 49-ஓ போட்டால் என்ன ஆகும்? போட்டி யிட்ட வேட்பாளர்களில் அதிக ஓட்டு வாங்கு பவர் பெற்றதைவிட அதிக ஓட்டு 49-ஓவுக்கு விழுந்தால் அந்தத் தேர்தலே செல்லாமல் போய்விடும். மறுதேர்தல் நடத்தும் போது, முதலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரும் மறுபடி நிற்க முடியாது. ஏனென் றால், அவர்கள் எல்லாரையும்தான் 49-ஓ மூலம் வாக்காளர்கள் நிராகரித்து விட்டார்களே!

இப்படியெல்லாம் நடக்கும் வாய்ப்பில்லை என்று சொல்ல முடியாது. 49-ஓ என்பதைப் பதிவு செய்ய, ஓட்டு இயந்திரத்தில் ஒரு தனி பட்டனை கொடுத்துவிட்டால், நிறைய பேர் 49-ஓ போட முன்வருவார்கள். இப்படி ஒரு ஏற்பாடு தேவை என்று மக்கள் சிவில் உரிமை சங்கமும், வேறு தொண்டு நிறுவனங்களும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டுள்ளன. நீதிமன்றத்தில் வழக்கு இரு வருடங்களாக நிலுவையில் இருக்கிறது. அரசியல் சட்டப்படி, வாக்குரிமை ரகசியமானது. 49-ஓ என்பதையும் ரகசியமாகவே போட வழி செய்யவேண்டும் என்பதற்காகவே இந்த வழக்கு.

ஒவ்வொரு தொகுதியிலும் 5000 பேர் 49-ஓ போட்டால் கூட, அரசியல் கட்சிகளுக்குப் பயம் வரும். தொகுதிக்கு 5 ஆயிரம் ஓட்டு வைத்துள்ள சாதி கட்சிக்குக் கூட்டணியில் 20, 30 ஸீட் தரத் தயாராக இருப்பவைதான் நமது அரசியல் கட்சிகள். அந்த அளவுக்கு 49-ஓ இருப்பது தெரிந்தால், முதல்கட்டமாக நல்ல வேட்பாளர்களை நிறுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படும். இல்லாவிட்டால் வேட்பாளர் நிராகரிக்கப்படும் நிலை வரை போய்விடும்.

ஆனால், இவ்வளவு அருமையான அகிம்சை ஆயுதமாக 49-ஓ தங்கள் கையில் இருப்பதை மக்களே அறியவில்லை.

அறியப்படுத்துவதற்காக ‘ஓ’ போடு என்ற இயக்கத்தை தொடங்கியுள்ளோம். இது தொடங்கப்பட்டதே ஒரு சுவையான கதை. ‘தீம்தரிகிட’ பத்திரிகை ஆண்டு விழாவுக்கு வந்திருந்த வாசகர்களையெல்லாம் ‘யாருக்கு ஓட்டுப் போடுவது’ என்ற தலைப்பில் பேசச் சொன்னோம். வெவ்வேறு கருத்துகள் பகிரங்கமாகத் தயக்கமில்லாமல் பேசப்பட்டன. 49-ஓ பற்றிப் பேசிவிட்டு எத்தனை பேர் அதை ஆதரிக்கிறார்கள் என்று கேட்டேன். முன்வந்த 30 பேரும் மறுபடியும் ஒரு நாள் சந்தித்துப் பேசினோம். ‘ஓ போடு. அதாவது ஓட்டு போடு. எந்த வேட்பாளரையும் பிடிக்காட்டி 49-ஓ போடு. ஓட்டு போடத் தவறாதே’ என்ற சுருக்கமான கொள்கைத் திட்டத்தை வகுத்தோம்.

இதையே டி-ஷர்ட்களில் அச்சடித்தோம். அவற்றை அணிந்து கொண்டு 20 ஆயிரம் துண்டு பிரசுரங்களுடன் ஏப்ரல் 6-ம் தேதி மாலை, வடபழனியிலிருக்கும் மாநில தேர்தல் ஆணைய

அலுவலகம் அருகில் இருந்து தொடங்கியது பிரசாரம். கோயம்பேடு பஸ் நிலையத்திலிருந்து தமிழகம் எங்கும் செல்லும் பஸ் பயணிகளிடம் பிரசுரங்களை விநியோகித்தோம். இந்தப் பிரசாரத்தை குறைந்த செலவில் தமிழகம் முழுவதும் ஆங்காங்கே எடுத்துச்சொல்ல முடியும் என்பதைக் காட்டும் வகையிலும் இதைச் செய்தோம்.

'ஓ போடு' பிரசார இயக்கத்தில் குடும்பத் தலைவிகள், ஆசிரியைகள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், அரசு ஊழியர்கள், கணினி நிபுணர்கள் என்று பலவிதமானவர்கள் இணைந்திருக்கிறார்கள். முதல் இரண்டே நாட்களில் 30 ஆயிரம் இ-மெயில்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. எஸ்.எம்.எஸ். மூலம் 49-ஓ பிரசாரம் நடக்கிறது.

## இணையதளம்: **www.ohpodu.org** **e-mail: fortynineohpodu@yahoo.com**

கோயம்பேடு நிலையத்தில் பல பஸ் பயணிகள், தங்கள் ஊரில் விநியோகிக்க இன்னும் 20, 50 பிரசுரங்களைக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக் கொண்டு போனார்கள். மக்கள் காட்டும் உற்சாகம் பிரமிப்பூட்டியது. நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிக வரவேற்பு 49-ஓ-வுக்கு!

ரகசியபட்டன் வந்து விட்டால், 49-ஓ ஆட்சியைக் கூடப்பிடித்து விடும்! அரசியலும் தேர்தல் முறையும் மாறிவிடும்!